10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 02 | அதிர்வு 30 | புதன்கிழமை 30 மே 2018 | ethirolimedia@gmail.com | 021 224 38 18

## வவுனியாவில் மாணவன் மாயம்



வவுனியா, மே 30

வவுனியா வைரவபுளியங்குளத்தில் உள்ள தனியார் கல்வி நிலையத்துக்கு செல்வதாக கூறிவிட்டு, வீட்டில் இருந்து சென்ற மாணவனைக் காணவில்லை என பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த மாணவன் வர்த்தக பிரிவில் கல்வி கற்று வருவதாகவும், இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 06▶

## கனடாவில் சூடு தமிழ் இளைஞர் பலி



ஸ்காபுரோ, மே 30

கனடாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு தமிழ் இளைஞன் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஜோர்க் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வினோஜன் சுதேசன் ( வயது 21) என்ற இளைஞனே சுட்டுக் 06▶

## தாக்குதலை கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மே 30

"காலைக்கதிர் பத்திரிகையின் பணியாளர் ய்ாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை தாக்கப்பட்டமையைக் கண்டித்தும் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என வலியுறுத்தியும் யாழ்ப்பாண நகரில் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாண ஊடகவியலாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ஆர்ப்பாட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். மத்திய பேருந்து 06▶

## தேர்த்திருவிழாவில் திருடர் கைவரிசை

வவுனியா, மே 30

வவுனியா குருமன்காடு சந்தியிலுள்ள ஆலயத்தின் தேர்திருவிழாவின்போது திருட்டு இடம்பெற்றுள்ளது. இதன்போது பக்தர்கள் பலரின் தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா குருமன்காட்டுச் சந்தியிலுள்ள காளி அம்மன் ஆலயத்தின் தேர்திருவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அங்கு வந்த திருடர்கள் தமது கைவரிசையைக்காட்டி தேர்த்திருவிழாவுக்கு வந்திருந்தவர்கள் 06▶

## புகையிரத ஊழியர்களின் விடுமுறைகள் இரத்து



கொழும்பு, மே 30

புகையிரத ஊழியர்களின் விடுமுறைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

அதன்படி, புகையிரத சாரதிகள், புகையிரத காவலர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களின் விடுமுறைகளே 06▶

# 20 ஆயிரம் பட்டதாரிகள் அரச சேவையில் இணைப்பு

கொழும்பு, மே 30

எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி முதல் 20 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சு அறிவித்துள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் சுமார் 57 ஆயிரம் பேருக்கும் ஒரே தடவையில் அரச சேவைக்குள் இணைக்கப்படவேண்டும் என வலியுறுத்தி பட்டதாரிகள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த நிலையில் அர[illegible]னது தீர்மானத்தில் உறுதியாக உள்ளது.

ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி முதல் மே மாதம் 5ஆம் திகதி வரை 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன. அதில் சுமார் 57 ஆயிரம் பட்டதாரிகள் சமுகமளித்தனர்.

இதன் இறுதி பெறுபேறுகள் அமைச்சுக்கு கிடைத்தன. கோரப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் 20 ஆயிரம் பட்டதாரிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குள்இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் அசங்க தயாரத்ன கூறினார்.

# சிங்களச் சீற்றத்துக்கு பயமே காரணம்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே.30

சிங்கள இனவாதிகளால் கொல்லப்படுவது குறித்து எனக்கு எந்தவொரு அச்சமும் இல்லை. சிங்கள மக்கள் தமிழர் மீது சீற்றமடைய நாங்கள் தான் காரணம். எங்கள் பயமே காரணம் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உங்களைப் பற்றி தெற்கில் மிகக் கேவலமாகக் கதைக்கப்படுகிறது. பிரபாகரன் தலையில் கோடரியால் வெட்டியதுபோல் உங்கள் தலையிலும் வெட்டவேண்டும் என்று கூறி உங்கள் வெட்டப்பட்ட தலையை வலைத் தளங்களில் படங்களாக அனுப்புகின்றார்கள். உங்கள் உயிருக்கு ஆபத்து வருமோ என்று 06▶



## வடக்கு கல்வியமைச்சர் யார்? மொட்டைக் கடிதத்துடன் தேடியலைந்த ரிஜடி

யாழ்ப்பாணம், மே.30

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் க.பரமேஸ்வரன் என்பவரை இலங்கை அரச பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் தேடி அலைந்து 3▶


## மகிந்த–மைத்திரி இணைவு விரைவில்



கொழும்பு, மே 30

அரசியலில் நிரந்தர எதிரிகள் என்று எவரும் இல்லை. எனவே, மகிந்த ராஜபக்சவுக்கும், மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் இணக்கப்பாட்டை 3▶

## மக்களின் கோரிக்கைகளை தூக்கி எறிந்த பிரதமர்



கிளிநொச்சி, மே 30

பிரதமர் ரணில் விக்ரமசிங்க கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட போது அவரிடம் முன்வைக்கப்பட்ட தமது கோரிக்கைகள் அடங்கிய பல கடிதங்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு முன்பாக வீசப்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வேலைவாய்ப்புக்காக வழங்கப்பட்ட சுய விபர கோவைகள் உள்ளடங்கலாக பல கடிதங்கள் இவ்வாறு பரவி வீசப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

பிரதமரின் கிளிநொச்சி விஜயத்தின் பின்னர் இவ்வாறு பல கோரிக்கைகள் அடங்கிய கடிதங்கள் வீசப்பட்டுள்ளதுடன், அதில் 06▶

## அரசாங்கத்திலிருந்து விலகுகிறது சு.க.?



கொழும்பு, மே 30

எதிர்வரும் மூன்றாம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியின்தேசிய குழுக் கூட்டத்தில் அரசாங்கத்திலிருந்து 06▶

## ஊழல்வாதிகளை பிடிக்க தவறிவிட்டது அரசாங்கம்

### அமைச்சர் அர்ஜுன விசனம்



கொழும்பு, மே 30

அரசாங்கம் ஊழல்வாதிகளையும் திருடர்களையும் பிடிக்க தவறியமையால் இன்று வீரர்கள் திருடர்களாகவும், திருடர்கள் வீரர்களாகவும் மாறியுள்ளதாக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் கடவத்தை 3▶

## சுண்டிக்குளத்தில் கோர விபத்து ஓட்டோ சாரதி ஸ்தலத்தில் பலி



கிளிநொச்சி, மே 30

கிளிநொச்சி - ஏ35 வீதி, சுண்டிக்குளம் சந்தியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

முச்சக்கர வண்டி ஒன்றும், டிப்பர் ரக வாகனமும் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் முச்சக்கரவண்டியை ஓட்டிச்சென்ற சாரதி சம்பவ இடத்திலேயே 3▶

# உயரும் விலைவாசி: வீதியில் யாழ். மக்கள்!



யாழ்ப்பாணம், மே 30

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பைக் கண்டித்து, யாழ்ப்பாணத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் யாழ். நகர்ப்பகுதியில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்டது.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் , இளைஞர்கள், பெண்கள் எனப் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்போது, "ஜே. ஆர். முதல் மைத்திரி வரை மக்களின் வாழ்வு கேள்விக்குறியே ", "விலை உயர்வுகளும் வரிச்சுமைகளும் மக்களின் தலைகளிலா?" , "உணவுப் பொருட்களின் விலைகளை உயர்த்தாதே", "ஆள்வோருக்கு உல்லாச வாழ்க்கை வாழ்வோருக்கு நெருக்கடி" போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு பொதுமக்கள் கோஷங்களை எழுப்பினர் . (ஆ)

## வாகன விபத்து: தாயும் மகளும் படுகாயம் !

மட்டக்களப்பு, மே 30

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்ன ஊறணியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் தாயும், மகளும் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தை ஏற்படுத்திவிட்டுத் தப்பிச்செல்ல முயன்ற வானை மக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

## முதலில் நாடாளுமன்றத் தேர்தல்!

கொழும்பு, மே 30

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரியின் ஆலோசகர்கள் கவனம் செலுத்துவதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக சட்ட நிபுணர்களின் ஆலோசனையும் பெறப்பட உள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் முடிவடைய உள்ளது.

அதேவேளை, நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் 2020 ஓகஸ்ட் மாதம்வரை நீடிக்கும். எனினும், நான்கரை ஆண்டுகள் கழித்தே நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

## ஹெரோயினுடன் பெண் சிக்கினார்



கொழும்பு, மே 30

வெள்ளவத்தைப் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிராண்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரைக் கைது செய்தபோது, அவரிடமிருந்த 10 மில்லிகிராம்நிறையுடைய ஹெரோயின் பக்கெற்றும், 21 கிராம் 430 மில்லிகிராம்நிறையுடைய ஹெரோயின் பக்கெற்றுக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

## தூதரகப் பணியாளர்களை குறைக்க நடவடிக்கை!



கொழும்பு, மே 30

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை 50 வீதமாகக் குறைக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பல நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் ஆக்கபூர்வமான முறையில் செயற்படவில்லை எனவும் ஜனாதிபதி அதிருப்தி வெளியிட்டுள்ளார். (ஆ)

## மினி சூறாவளியால் 6 வீடுகள் சேதம்

ஹட்டன், மே 30

மலையகத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக இரு வேறு பகுதிகளில் ஏற்பட்ட மினி சூறாவளியால், 6 வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்த மினி சூறாவளியால், வட்டவலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெம்பஸ்டோ தோட்டத்தில் லயன் குடியிருப்பின் மீது மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் மூன்று வீடுகள் சேதமாகி உள்ளன.

இதேவேளை, ஹட்டன்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிஓயா கீழ்ப்பிரிவு தோட்ட லயன் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள மூன்று வீடுகளும் சேதமாகி உள்ளன.

உயிராபத்துக்கள் ஏற்படாதபோதிலும் இரண்டு வீடுகள் கடும் சேதமாகி உள்ளதுடன், ஏனைய வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பாதிப்புக்குள்ளான குடியிருப்புகளைத் திருத்தியமைக்கும் நடவடிக்கையில் தோட்ட நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிகமாக உறவினர்கள் வீடுகளில் தங்க வைக்கப்படுள்ளனர். (ஆ)

## அனர்த்தப் பாதிப்புக்கு மேலதிக நிதியொதுக்கீடு

### துமிந்த தெரிவிப்பு



கொழும்பு, மே 30

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவும், பாதிக்கப்பட்ட சகல இடங்களையும் அபிவிருத்தி செய்வதற்கும் மேலதிக நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

"இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சகல இடங்களையும் அபிவிருத்தி செய்வதற்கான நிதியை வழங்குவதற்குரிய மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர்களுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. வீதிகள், பாலங்கள் என்பன தொடர்பான சேத மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கு, இது தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக 500 ரூபா தொலைபேசிக் கட்டணம் வழங்கப்பட உள்ளது.

வெள்ளத்தால் அடிக்கடி பாதிப்புக்கு உள்ளாகும் களனிப் பிரசேதத்தைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்களுக்கான நிலையான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட இருக்கிறது. வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளுக்காக 25 இலட்சம் ரூபா வரையில் வீடுகளுக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால், சேத மதிப்பீடின்றி இந்தப் பெறுமதியை வழங்க முடியாது. மதிப்பீட்டுப் பணிகள் பூர்த்தியடையும் வரை சேதங்களுக்காக முதல் கட்டமாக பத்தாயிரம் ரூபா வழங்கப்பட இருக்கிறது. அனர்த்தங்களுக்கு உள்ளான 20 மாவட்டங்களுக்காகவும் நான்கு கோடி ரூபா நிதியை அரசாங்கம் வழங்கி உள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

## ஏக்க நாயக்கவிடம் சிறப்பு விசாரணை



கொழும்பு, மே 30

அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தினார் என்னும் குற்றச்சாட்டில் அண்மையில் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் காணி இராஜாங்க அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்கவிடம் நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் நாலரை மணிநேர சிறப்பு விசாரணையை நடத்தினர்.

காலை 10 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டதாகவும், இதன்போது அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாகவும் நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

டி.பி. ஏக்கநாயக்க கலாசார அமைச்சராக இருந்தபோது அமைச்சின் வாகனம் ஒன்றைத் தேரர் ஒருவருக்கு வழங்கினார். இதனால், அவர் அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறியே இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## ஊடகங்களை அச்சுறுத்த அரசாங்கம் முயற்சி

### சொல்கிறார் மகிந்த



கொழும்பு, மே 30

ஊடகங்களை அச்சுறுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பெலியத்த பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின்போது ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"தற்போதைய அரசாங்கம் ஊடகங்களை அச்சுறுத்தி உண்மைகள் அம்பலமாவதைத் தடுக்க முயற்சித்து வருகின்றது. நாட்டில் தற்போது நெருக்கடியான நிலைமை உருவாகி உள்ளது. இந்த நிலையை அரசாங்கம் மூடி மறைக்க முயற்சிக்கின்றது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

எதிரொலி
Ethiroli

புதன். 30 மே 2018 ethirolimedia@gmail.com

# கோமாளிக்கூத்தை கடந்து போதல்

ஒரு தாக்கத்துக்கு எதிரானதும் சமமானதுமான மறுதாக்கம் வெறுமனே நியூட்டனின் மூன்றாவது விதியாக எழுத்துவடிவில் மட்டும் இருப்பதில்லை. கணந்தோறும் கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருப்பது. மறவன்புலவு சச்சி கொடுத்த மாட்டிறைச்சி எதிர்ப்பும், பௌத்த, இந்துக்களுக்கு மட்டுமே இலங்கை சொந்தம் என்ற 'குபீர்' சிரிப்பூட்டலுக்கு சற்றும் சளைக்காத இன்னொரு வடிவேலுத்தனமான மறுதாக்கம் முஸ்லிம் தரப்பில் நிகழ்ந்திருக்கிறது.

எப்படி மறவன்புலவு சச்சி, தமிழ்ப்பரப்பில் ஒரு கோமாளியாக இருக்கிறாரோ அதேபோல முஸ்லிம் மக்களாலும் கோமாளியாகப் பார்க்கப்படும் மௌலவி முபாரக் அப்துல் மஜீத் தான் இப்படி சச்சிக்கு பதிலடி கொடுத்துள்ளார். அதாவது எல்லோருமே ஆரம்பத்தில் இஸ்லாமியராக இருந்தே மதம் மாறியதாகவும், இலங்கையில் ஆதிமதம் முஸ்லிம் என்று வாய்பிளக்க வைக்கும் கதையை அளந்த முபாரக் அப்துல் மஜீத், அத்தோடு நின்றுவிடாமல் அடுத்த கட்டப் பாய்ச்சலை நிகழ்த்தி, பகிடியின் உச்சத்தைத் தொட்டுவிட்டார். இராமன் என்பது ரஹ்மான் என்பதில் இருந்தும், சீதை என்பது சயீதா என்பதில் இருந்தும் மருவிய பெயர்களே என்று போட்டாரே ஒரு போடு. அவ்வளவு தான். அண்டம் குலுங்குமளவுக்கு எல்லோரும் சிரித்து மாளவில்லை.

இந்த மௌலவி இப்படிக் கோமாளித்தனமாக இருந்தாலும், குறித்த ஒரு கும்பல் அவரை ஆதர்சத் தலைவராகக் கொள்ளவும் தவறவில்லை. இந்தக் கும்பல் தான், சில சமயங்களில் தருணம் பார்த்து இனவாதத்தைக் கொளுத்திவிட்டு குளிர்காய்வதுண்டு. அவர்களுக்குத் தேவையானதெல்லாம் உண்மையில் முஸ்லிம்களே இலங்கையின் ஆதிக்குடிகள் என்று நிறுவுவது மட்டுமல்ல. அது அவர்களுக்கு இரண்டாம், மூன்றாம் பட்சமே. அப்படியானால் முதல் பட்ச நோக்கம் என்ன? வேறென்ன, தங்கள் மீதான ஊடக, சமூகப் பார்வைகளைக் குவியச் செய்வதற்காக மட்டுமே இப்படி உப்புச் சப்பற்ற, 'பப்ளிசிட்டி' காரியங்களையும், கருத்துக்களையும் தெறிக்க விடுகின்றனர். மறவன்புலவு சச்சிக்கும், மௌலவி மஜீத்துக்கும் இந்த நோக்கத்துக்காகவே பின்விளைவுகளைப் பற்றியோ, வரலாற்று உண்மைகளையோ கவனத்திற் கொள்ளாது வாய்க்கு வருவதையெல்லாம் புசத்துகிறார்கள். எனவே இவர்களையோ, இவர்களின் கருத்துக்களையோ கண்டுகொள்ளாமல் நகர்வதை விடவும், அவர்கள் சொல்லும் கருத்துக்கள் எல்லாமே அபத்தமானவை என்று அவரவர் சார்ந்த இனத்தவர்களே பரிகசிப்பதும், அதை சமூக வலைத்தளங்களில் கேலி செய்வதும் ஒரு வகையில் எதிர்காலத்துக்கு இலாபமே. ஏனெனில் இனியும் அவர்கள் ஏதாவது இனக்குரோதமான கருத்துக்களைக் கொப்பளித்தால், அதையும் பகிடியாகவே பார்க்கும் சூழல் இதனால் உருவாகும். 'அவர்கள் இப்படித்தான். இதையெல்லாம் சிரிப்பதற்காகத்தான் சொல்லியிருப்பார்கள். சீரியஸாகச் சொல்லவில்லை. அதனால் இதையெல்லாம் ஒரு பொருட்டாகவே எடுக்கத் தேவையில்லை" என்று வாயெல்லாம் பல்லாக, இந்தப் 'பவர் ஸ்ரார்களை' பார்த்தபடி நகர்ந்துவிடுவார்கள். அவர்களும் தங்களிஷ்டத்துக்கு கத்துவார்கள். ஆனால் இம்மியளவும் பலனிருக்காது.

ஆக, இரண்டு கோமாளிகளுக்கிடையிலான ஏட்டிக்குப் போட்டியாக இந்த விடயம் மாறிவிட்டதால், இரு இனத்தவர்களும் இந்தக் கோமாளிக் கூத்தைப் பார்த்து ரசிக்கத் தயாராகிவிட்டார்கள். ஆனால் தாங்கள் சொல்வதைத்தான் இந்த உலகமே உற்று நோக்கி அதைக் கவனத்தில் எடுப்பதாக , இந்தக் கோமாளிகள் நம்பிக்கொண்டு இருப்பதுதான் ஆகப் பிந்திய அபத்தம்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# தீவிரவாதிகள் அச்சுறுத்தலால் 12 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு,மே 30

தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு இலக்காகிய இலங்கையை சேர்ந்த 12 பேர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். தொழில் பிணக்கு காரணமாக சோமாலியாவில் நிர்க்கதியாகியிருந்த 12 இலங்கையர்களே நேற்று முன்தினம் திங்கட்கிழமை நாட்டுக்குத் திரும்பியுள்ளனர்.

இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் அகதிகளுக்கான சர்வதேச அமைப்பின் உதவியுடன் இவர்கள் நாடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் சோமாலியாவில் பணியாற்றிய இந்த இலங்கையர்களுக்கு உரிய வேதனம் மற்றும் ஆலோசனை சேவைகள் எவையும் வழங்கப்படவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இத்தாலியில் விபத்து இலங்கையர் உயிரிழப்பு

கொழும்பு,மே 30

இத்தாலியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கை இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் உயிரிழந்தவர் கம்பஹாவைச் சேர்ந்த 24 வயதான சிந்தன தனஞ்சய என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைமுடிந்துதிரும்பிக்கொண்டிருந்த வேளை அவர் ஓட்டிச்சென்ற ஸ்கூட்டர் பாரவூர்தி ஒன்றுடன் மோதி ஏற்பட்ட விபத்தில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தப்பிய சிப்பாய் கைது

மட்டக்களப்பு,மே 30

சீனக்குடா விமானப் படை முகாமிலிருந்து துப்பாக்கியுடன் தப்பிச் சென்ற சிப்பாய், கைது செய்யப்பட்டுள்ளார் என்று விமானப் படை அறிவித்துள்ளது.

இவர் மட்டக்களப்புபெரிய மடு பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

சீனக்குடா விமானப் படை முகாமில் கடமைபுரிந்த குறித்த சிப்பாய், ரி-56 ரக துப்பாக்கி மற்றும் 90 ரவைகளுடனான 3 மகசின்களுடன் நேற்று அதிகாலை தலைமறைவானார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொடர்ச்சிகள்

**ஊழல்வாதிகளை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

'திருடர்களைப் பிடிப்போம் என்று ஜனாதிபதியும் பிரதமரும் கொடுத்த வாக்குறுதி இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை.

மக்கள் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அதிகாரத்தை வழங்கினார்கள், காரணம் திருடர்களை பிடிக்கவே.

ஆனால் அதை இன்னும் ஜனாதிபதியும் பிரதமரும் நிறைவேற்றவில்லை.

இது நாட்டுக்கு துரதிர்ஷ்டமே.

அதனால்தான் இன்று திருடர்கள் வீரர்களாகவும் வீரர்கள் திருடர்களாகவும் உள்ளனர்.

கடந்த அரசாங்கத்தில் இலஞ்ச ஊழலில் ஈடுபட்டவர்கள் இன்று சுதந்திரமாக உள்ளனர். மூன்றரை வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் எம்மால் இன்னும் கடந்த கால திருடர்களை பிடிக்க முடியாமல் உள்ளது.

ஒரு பக்கம் கவலையாக இருந்தாலும் மறுபக்கம் மகிழ்ச்சியாக உள்ளது காரணம் தற்போதைய அரசாங்கத்தில் உள்ள திருடர்களையாவது பிடிக்க முடிந்தமை.

குறிப்பாக அர்ஜூன அலோசியஸ்சிடம் பணம் பெற்ற 118 பேரின் பெயர்களை கட்டாயமாக மக்கள் முன் வெளிக்கொண்டு வரவேண்டும்.

உண்மையில் கூச்சல் போட்ட சிலரின் உண்மையான முகம் தற்போது வெளிவந்துள்ளது.'என்றார்.

20ஆவது திருத்தம் தொடர்பாக அமைச்சர் தெரிவிக்கையில்,

'20 ஆவது திருத்தம் பற்றி தற்போது சரியான முடிவை எடுக்க முடியாது. ஆனால் நாட்டுக்கு முக்கியம் நாட்டு மக்கள் விரும்பும் அரசியலமைப்பேயாகும்.

நான் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமைக்கு எதிரானவன் அல்ல.

ஆனால் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையில் சாதகங்களும் உண்டு பாதகங்களும் உண்டு.

அந்த பதவியில் அமரும் நபர் தமது அதிகாரங்களை தவறாகவும் பயன்படுத்தலாம் அல்லது சரியான முறையிலும் அமுல்படுத்தலாம்.

ஆகவே அது நபரை பொறுத்தது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை தீயதா நல்லதா என குறிப்பிட்டுக் கூறமுடியாது.

நாட்டின் பாதுகாப்புக்கு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையே மிக அவசியமாகும்." என்றார்.

**வடக்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரிந்துள்ளனர்.

கொழும்பில் பொலிஸ் தலைமையகம் அமைந்துள்ள 4ம் மாடிக்கு விசாரணையொன்றுக்கு சமூகமளிக்க அழைப்பு விடுக்கவே அவரை தேடி பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் அலைவது தெரியவந்துள்ளது.

நேற்றையதினம் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அலுவலகத்துக்கு இலங்கை அரச பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவின் உறுப்பினர்கள் இருவர் வருகை தந்தனர். அவர்கள் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் க.பரமேஸ்வரனை எதிர்வரும் ஜூன் மாதம் 5ம் திகதி கொழும்பு பொலிஸ் தலைமையகத்துக்கு விசாரணைக்கு வருகை தர அழைக்கும் அழைப்பாணையுடன் வந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

எனினும் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் க. பரமேஸ்வரன் என எவருமில்லையென தெரிவித்த அமைச்சின் அதிகாரிகள் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி.க.சர்வேஸ்வரனை சந்திக்க அவர்களுக்கு அனுமதித்துள்ளனர்.

எவரது ஒப்பமும் அற்ற வெறுமனே கைகளால் எழுதப்பட்டு யாரால் எழுதப்பட்டது அல்லது யாருக்கு எழுதப்பட்டதென்ற எந்தவொரு தகவலுமற்றதாக போட்டோ பிரதி எடுக்கப்பட்ட ஆவணமொன்றை கையளித்த அவர்கள் விசாரணையொன்றுக்காக கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி.க.சர்வேஸ்வரனை கொழும்பு பொலிஸ் தலைமையகத்துக்கு விசாரணைக்கு வருகை தர அழைப்பு விடுத்திருந்தனர்.

எனினும் மொட்டைக்கடிதப்பாணியில் அமைந்திருந்த குறித்த கடிதத்தை ஏற்க மறுத்த அவர் எதிர்வரும் ஜூன் 5ம் திகதி முதல் 14ம் திகதி வரை ஏற்கனவே திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் தனக்கு அவ்வாறு சமூகமளிக்க நேரமில்லையென தெரிவித்துள்ளார்.

வடமாகாண கல்வி அமைச்சரிடமே மொட்டைக்கடித அழைப்பாணையுடன் வருகை தரும் இலங்கை அரச பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் சாதாரண பொது மக்களை எவ்வாறு கையாள்வர் என்பது குறித்து தனக்கு சந்தேகமிருப்பதாக கலாநிதி.க.சர்வேஸ்வரன் தெரிவித்தார். அத்துடன் இப்பிரிவினர் சட்டரீதியாக உத்தியோக பூர்வமாக கடிதங்களை கையாளாது மொட்டைக்கடித பாணியில் அனுப்பிவைப்பதும் எதற்காகவெனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

**சுண்டிக்குளத்தில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலியாகி உள்ளார். இவருடைய சடலம் நீண்ட நேரத்துக்கு பின்னரே முச்சக்கரவண்டியிலிருந்து எடுக்கப்பட்டதாகவும், அந்தளவுக்கு முச்சக்கர வண்டி கடுமையாக சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, டிப்பர் வாகனத்தை ஜீப் வாகனம் ஒன்று முந்திச் செல்ல முற்பட்டவேளை, டிப்பர் வாகனத்தின் பின்னால் மோதியுள்ளது. இதையடுத்து குறித்த டிப்பர் வாகனம் முன்னால் வந்த முச்சக்கர வண்டியை மோதியுள்ளது.

இதில் மூன்று வாகனங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதுடன், சாரதி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த முச்சக்கரவண்டி குறித்த டிப்பர் வாகனத்தின் கீழ் சென்று இறுகியுள்ளதுடன், முச்சக்கரவண்டியை கடும் சிரமத்தின் மத்தியில் நீண்ட நேரம் களித்தே வெளியில் எடுத்தனர்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்

**மகிந்த...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்துவது சாத்தியமே என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

"கூட்டு அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதையே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் விரும்புகிறார். அதற்கான நாளை தீர்மானிக்குமாறு அவர் மத்திய குழுவிடம் கேட்டுள்ளார்.

- எதிர்க்கட்சியில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களே.

நாற்காலி அல்லது வெற்றிலை சின்னத்தின் கீழ் அனைவரும் ஒன்றிணைந்து போட்டியிட முடியாது என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. எல்லோரும் ஒற்றுமையாக நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இன்று நாளும் கோளும்

30.05.2018 புதன்கிழமை விளம்பி வருடம் வைகாசி மாதம் 16 ஆம் நாள்

பிரதமை 09.44 வரை | கேட்டை மு.ப. 03.30 வரை | குளிகை மு.ப. 10.30-12.00

இராகுகாலம் 12.00- 01.30 | சுபநேரம் காலை 09.30 - 10.30 | எமகண்டம் 07.30 - 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உயர்வு | பாசம் | சுகம் | லாபம் | அன்பு | முயற்சி | நன்மை | வரவு | தாமதம் | பக்தி | அமைதி | தெளிவு |

# சில்ப அபிமானி விருது விழா ஜனாதிபதி தலைமையில்!





கொழும்பு, மே 30

கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சு, தேசிய அருங்கலைகள் பேரவையுடன் இணைந்து நடத்திய 'சில்ப அபிமானி 2017' கைவினைத் தொழிற்றுறை விருது விழா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய மட்டத்தில் சிறந்த படைப்புக்களை உருவாக்கிய படைப்பாளர்களை பாராட்டுவதற்காக , இந்த கைவினைத் தொழிற்றுறை விருது விழா ஏற்பாடு செய்யப்படும் அதேவேளை, கைவினைத் தொழிற்றுறையின் பெருமை, அபிமானம் மற்றும் தேசிய அடையாளங்களைப் பிரதிபலிக்கச் செய்தல் என்பன இதன் நோக்கமாகும்.

21 பிரதான கைவினைத் தொழிற்றுறைகள் மற்றும் 57 உப துறைகள் என்பவற்றின் கீழ் இந்த சில்ப அபிமானி கைவினைத் தொழிற்றுறைக் கண்காட்சி மாகாண மட்டத்தில் நடாத்தப்படும். அதில் வெற்றிபெறும் படைப்புக்கள் தேசிய மட்டப் போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும்.

அதற்கமைய 2015 ஆம் ஆண்டு வரை வருடாந்தம் இந்த கைவினைத் தொழிற்றுறைப் போட்டியும் கண்காட்சியும் இடம் பெற்று வருகின்றன. 2016 ஆம் ஆண்டு முதல் 'ஜனாதிபதி கைவினைத் தொழிற்றுறைப் போட்டி' என பெயரிடப்பட்டதுடன், இதில் வெற்றி பெறுபவர்களுக்கு சன்மானம், விருது, சான்றிதழ் மற்றும் பணப்பரிசு என்பன ஜனாதிபதியால் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்போது, பாரம்பரிய கைவினைத்திறனைக் கொண்டு நாட்டின் கலாசார உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலான படைப்புக்களை உருவாக்கிய பல கலைஞர்களுக்கு, தங்கம் மற்றும் வெள்ளி விருதுகளை ஜனாதிபதி வழங்கிக் கௌரவித்தார். அத்துடன், அவர்களுக்கான சான்றிதழ்களும், பணப்பரிசும் வழங்கப்பட்டன. (ஆ)

## பாவனைக்குதவாத பொருட்களை திருப்பி அனுப்ப நடவடிக்கை!

கொழும்பு, மே 30


மனித பாவனைக்குதவாத உணவுப் பொருட்களைத் தாங்கி வந்த 74 கொள்கலன்களைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 18 கொள்கலன்கள் எதிர்வரும் தினங்களில் திருப்பியனுப்பப்படும் என்று சுங்கத் திணைக்கள ஊடக பேச்சாளர் சுனில் ஜெயரத்ன தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட ரின் மீன்களில் புழுக்கள் காணப்படுவதாகவும், அவற்றைச் சந்தைக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் கூறப்பட்டு வரும் நிலையில் அவற்றின் உண்மைத் தன்மைக் குறித்து ஊடகங்கள் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"மனித பாவனைக்குதவாத உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள நிலையில், அவற்றைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு 100 க்கும் அதிகமான கொள்கலன்கள் இலங்கை துறைமுகங்களுக்கு வருகின்றன. அவற்றில் உணவுப்பொருட்களைத் தாங்கி வரும் கொள்கலன்களை, இலங்கை சுங்கப் பிரிவு மற்றும் சுகாதார அமைச்சின் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் பரிசோதனை செய்வர். அதன்பின்னரே நுகர்வோருக்காக சந்தைக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் சுங்கப் பிரிவினரால் மேற்கொள்ளப்படும். இதன்போது, தரச் சான்றிதழை பெற்றுக் கொள்ள முடியாத கொள்கலன்கள் சுங்கப் பிரிவினரால் சீல் வைக்கப்படும்.

இவ்வாறு அண்மையில் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட 74 கொள்கலன்கள் தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனையில் மனித பாவனைக்குதவாத பொருட்கள் என கண்டறியப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை இறக்குமதி செய்வோர் பிரபல நிறுவனங்களைச் சேர்ந்தவர்களாவர். எனவே, இது குறித்த உள்ளக விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை திரும்பி அனுப்பல் மற்றும் அழித்தல் போன்ற நடவடிக்கைகளில் சுங்கப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்" என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## ஜே.வி.பியின் செயற்பாட்டில் சந்தேகம் கொள்ளும் செஹான்



கொழும்பு, மே 30

தேசிய அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாகச் செயற்படும் மக்கள் விடுதலை முன்னணி தற்போது 20 ஆவது அரசியல் திருத்தத்தை சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளமையானது, பாரிய சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளது என கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

"மக்கள் விடுதலை முன்னணியினர் சமர்ப்பித்துள்ள 20 ஆவது திருத்தம் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் ஒரு முறைமையாகக் காணப்படுகிறது. அதாவது, மக்களால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம் என்ற முறைமை தற்போதைய அரசியலமைப்பில் காணப்படுகின்றது. ஆனால், 20 ஆவது அரசியலமைப்பில் இந்த முறைமை இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் நாடாளுமன்றத்தில் அரசியலமைப்பு பேரவையில் தேசிய அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக மக்கள் விடுதலை முன்னணி அங்கம் வகிக்கின்றது. இந்த நிலையில், அரசாங்கம் ஆட்சிக்கு வந்த மூன்று வருட காலத்தின் பின் தற்போது மக்கள் விடுதலை முன்னணியினர் 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளமை நெருடலாக உள்ளது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## நாவலப்பிட்டியிலும் மினிசூறாவளி !



நாவலப்பிட்டி, மே 30

நாவலப்பிட்டி கெட்டபுலா புதுக்காடு தோட்டத்தில் நேற்றுக் காலை ஏற்பட்ட மினிசூறாவளி காரணமாக, 14 தொழிலாளர் குடியிருப்புகள் சேதமடைந்துள்ளன. இதனால், 60 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் கெட்டபுலா இல- 2 தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது, குடியிருப்புகளின் கூரைகள் காற்றில் அள்ளுண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவிகளைத் தோட்ட நிர்வாகம் மேற்கொண்டுள்ளது. (ஆ)

## முன்னாள் போராளியிடம் தொடர் விசாரணை!

கொழும்பு, மே 30

முன்னாள் போராளியும் ஜனநாயகப் போராளிகள் கட்சித் தலைவருமான வேந்தனிடம் தொடர் விசாரணை இடம்பெற்றுள்ளது.

நான்காம் மாடியில் வைத்துக் கடந்த சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மதியம் 2. 30 மணி வரையான 5 மணித்தியாலங்கள் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் குறித்த விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, மாவீரர்தினக் கொண்டாட்டம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயற்பாடுகள் ஆகியன குறித்துப் பல கேள்விகளைக் கேட்டதுடன், அவரின் வாக்குமூலத்தையும் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் பதிவு செய்தனர்.

முள்ளிவாய்க்காலில் உயிர் இழந்த உறவுகளை நினைவு கூருவதற்காகவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்தியதாக வேந்தன் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். அத்துடன் முன்னாள் போராளிகளை ஒன்றிணைத்து ஜனநாயக அரசியலை முன்னெடுப்பதே ஜனநாயகப் போராளிகள் கட்சியின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள போராளியான வேந்தன், வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

## அலோசியஸிடம் பணம் பெறாதவர்கள் நானும் அனுரகுமாரவுமே!

### ரஞ்சன் வாக்குமூலம்

கொழும்பு, மே 30

பேர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸிடம் இருந்து, பணம் வாங்காத இரண்டு எம்.பிக்கள், நானும், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவுமே ஆவோம் என்று பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

"அர்ஜுன் அலோசியஸ் பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பணம் வழங்க முயற்சித்தார். அதில் நானும் ஒருவன். எனினும், நான் அவரிடமிருந்து பணத்தை வாங்கவில்லை. அவர் எனக்குக் கடந்த 2015 ஆம் ஆண்டு பணம் வழங்கியிருந்தபோதிலும், அதனை நான் நிராகரித்துவிட்டேன்

இதேவேளை, ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகள் உள்ளிட்ட 118 நபர்கள் பேர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் லிமிடெட் நிறுவனத்திடம் பணம் வாங்கி உள்ளதாக நம்பகத்தகமான தகவல்கள் தெரிவிக்கின்றன. அர்ஜுன் அலோசியஸிடம் இருந்து முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர பெற்றுக் கொண்ட ஒரு மில்லியன் ரூபா பணத்தை, அவர் திருப்பிக் கொடுக்க வேண்டும்." எனவும் அவர் தெரிவித்தார். (ஆ)

# ‘லங்கா சதொச’ வளாகத்தில் எலும்புகள், பற்கள் மீட்பு



மன்னார், மே 30

மன்னார் நகர நுழைவாயில் ‘லங்கா சதொச’ விற்பனை நிலைய வளாகத்தில், நேற்றுமுன்தினமும், நேற்றும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது மேலும் சில மனித எலும்புத் துண்டுகள் , மனிதப் பற்கள் என்பன கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

விற்பனை நிலைய வளாகத்தில், சுமார் 7 அடி ஆழத்தில் பரவலாகக் காணப்பட்ட மனித எலும்புத் துண்டுகள் மற்றும் பற்கள் என்பன மீட்கப்பட்டதோடு, சேகரித்து வைக்கப்பட்ட மண்ணில் இருந்தும், எலும்புத் துண்டுகள் மற்றும் பற்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த விற்பனை நிலைய வளாகத்திலும், மன்னார் பொது மயானத்துக்குப் பின்பகுதியில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த மேற்படி விற்பனை நிலைய வளாகத்தில் இருந்து அகழப்பட்ட மண்ணிலுமே, இந்த எச்சங்கள் காணப்பட்டன.

மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ் ராஜா முன்னிலையில் ஆரம்பமான இந்த அகழ்வுப் பணியின் போது, விசேட சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ.ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ச தலைமையிலான குழுவினர், களனிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ராஜ் சோமதேவா தலைமையிலான குழுவினர், காணாமற் போனவர்களின் குடும்பங்கள் சார்பான சட்டத்தரணிகள் வி.எஸ்.நிரஞ்சன் மற்றும் ரணித்தா ஞானராஜ், விசேட தடவியல் நிபுணத்துவப் பொலிஸார், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மன்னார் நகரசபை, நில அளவைத் திணைக்களம், பிரதேச செயலகம், மாவட்டச்செயலகம், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைகளின் அதிகாரிகள், தலைவர்கள் ஆகியோர் பங்கேற்றனர். (ஆ)

# அரசாங்கத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்வேன்

## சொல்கிறார் பந்துல



கொழும்பு, மே 30

தேசியக் கடன் குறித்து அரசாங்கம் போலியான தகவல்களை வெளியிட்டு வருகின்றது. இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யவுள்ளேன் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

“கடன் தொடர்பில் உண்மையான தரவுகளைப் பெறுவதற்கு நிதியமைச்சில் எழுத்து மூலக் கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளேன். அரசாங்கம் இந்த ஆண்டு மாத்திரம் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகை 2845 பில்லியன் ரூபாவாகும். இது அடுத்த வருடம் இரட்டிப்படையும்’ என நிதியமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளமையானது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

கடந்த அரசாங்கத்தை விட தேசிய அரசாங்கத்தின் மூன்று வருடகால நிர்வாகத்திலேயே மக்களின் வாழ்க்கை செலவுகள் உயர் மட்டத்தில் காணப்படுகின்றன. நாளாந்தம் அனைத்துத் துறைகளிலும் உற்பத்தி, விநியோகச் செலவுகள் உயர்வடைந்த நிலையில் உள்ளது.

இந்த நிலையில், கடன்களை மீளச் செலுத்துவதற்காகவே அதிக வரிகள் அறவிடப்படுகின்றன என அரசாங்கம் குறிப்பிடுகின்றது. ஆனாலும் ,வெளிநாட்டு கடன்களை இதுவரை காலமும் அரசாங்கம் மீளச் செலுத்தவில்லை.” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# ‘கோரா’ இறந்தது



ஹட்டன், மே 30

ஹட்டன் பொலிஸ் வலயத்தில் கடந்த மூன்றுவருடங்களாகச் சேவையாற்றிவந்த “கோரா” என்றழைக்கப்படும் மோப்பநாய், நேற்றுக் காலை உயிரிழந்ததுள்ளது.

எட்டு வயதுடைய கோரா, கடந்த மூன்று வருடங்களாகக் ஹட்டன் பொலிஸ் வலயத்தில் சேவை புரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிவனொளி பாதமலை பருவ காலத்தில், போதைப்பொருட்களுடன் மலைக்குச் செல்வோரை இனங்கண்டு, அவர்களைக் கைதுசெய்வதற்கு கோரா பலவகையிலும் உதவியுள்ளது.

மத்திய மாகாணத்தில் பொலிஸ் மோப்பநாய்களுக்கு பயிற்சி வழங்கும் தலைமை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்ற போதே, கோரா உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு, அம்பாறை, பேலியகொட, பண்டாரவளை ஆகிய பிரதேசங்களிலும் கோரா பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# ஹெரோயினுடன் வைத்தியர் கைது!

கினிகத்தேனை , மே 30

ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று, கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் கொழும்பில் இருந்து கினிகத்தேனை பேரகாமுள்ள பகுதியில் உள்ள உள்ள தனது வீட்டுக்கு நேற்று சென்று கொண்டிருந்தார். இந்த நிலையில், பொலிஸார் மேற்கொண்ட சோதனையின்போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து 250 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்தேக நபரை ஹட்டன் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகக் கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர். (ஆ)

# விடுமுறைக் காலத்தில் விடைத்தாள் திருத்தம்!

கொழும்பு, மே 30

கல்விப் பொதுதராதர சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகளின் விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளை, பாடசாலை விடுமுறைகளின் போது மேற்கொள்வதற்கு யோசனை ஒன்றை முன் வைத்துள்ளதாக கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பரீட்சை பெறுபேறுகள் வெளியாவதில் ஏற்படும் வீணான கால தாமதங்களைத் தவிர்க்கும் நோக்கத்திலேயே இந்த யோசனை முன் வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஆ)

# மன்னாரில் வீடு தீக்கிரை


மன்னார், மே 30

மன்னார் சாந்திபுரம் பகுதியில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் வீடு ஒன்று முற்றாக எரிந்து தீக்கிரையாகி உள்ளது.

மன்னார் சாந்திபுரம் நூறு வீட்டுத் திட்டத்தில் உள்ள வீடொன்றிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. எனினும், இந்தச் சம்பவம் நடக்கும் பாது வீட்டில் எவரும் இல்லை எனவும், வீட்டில் ஏற்பட்ட மின் கசிவே விபத்துக்குக் காரணம் எனவும் ஆரம்பக்கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தின் காரணமாக வீட்டிலுள்ள அனைத்துப் பொருட்களும் முற்றாக எரிந்து நாசமாகி உள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஆ)



# அபிவிருத்தி எண்டு உவர் ஆருக்குக் காது குத்துறார்?

ரணில் இருந்தாப்போலை “யாழ்ப்பாணம் வரப் போறன் நான்” எண்டு சொல்லேக்கையே எனக்குத் தெரியும் ஆள் சும்மா வராது. ஏதேன் இடக்கு முடக்கா செய்யலாம் எண்ட உடனைதான் காய் வெளிக்கிட்டு வந்திருக்கு. வந்து எல்லாரையும் சந்திச்சாப் பிறகு ஒருக்கா நல்லூர் கந்தனைக் கும்பிடப்போறன் எண்டு கேட்டவர். பிறகு குழந்தைப் பிள்ளையள் அடம்பிடிக்கிற மாதிரி ஒருக்கா றியோவுக்குப் போக் வேணும் எண்டு கேட்டவராம். அப்ப கூடநாட நிண்டவை சொன்னவையாம் அதெல்லாம் சீனி கூடின சமான்கள். திண்டால் பிரச்சினை சேர். சும்மா அடம்பிடியாதையுங்கோ. கொழும்பிலை இல்லாத ஐஸ்கிறீமோ? அங்கை வாங்கித் தாறம், வாங்கோ போகலாம் எண்டு சொன்னாலும் சொல்லுக் கேக்கமாட்டன் எண்டிட்டு றியோ போய் ஒரு ஸ்பெஷல் வாங்கி வெளுத்தாப் பிறகுதான் மனுசனுக்கு ஆசை அடங்கிச்சுதாம்.

சரி வந்தனீர் வந்த பாட்டைப் பாத்திட்டுப் போமன். போய் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்திலை நிண்டு கொண்டு என்ன சொல்லுறீர்? அபிவிருத்தியளை யாழ்ப்பாணத்துக்கை மட்டும் வைத்திருக்காமல் கிளிநொச்சிக்கும், முல்லைத்தீவுக்கும், அங்காலையும், இங்காலையும் முன்னெடுக்க வேணும். குடாநாட்டுக்குத் தெற்குப் பகுதியிலை பூநகரி இருக்கு. வன்னியின்ரை மற்றப் பகுதியும் இருக்கு. அதேன் யாழ்ப்பாணத்துக்கை மட்டும் எல்லாத்தையம் வைச்சிருக்க வேணும். ஆனபடியாலை யாழ்ப்பாணத்துக்குச் சமமான ஒண்டை அங்காலையும் அமைச்சால் நல்லது எண்டு சொல்லிப்போட்டு என்ன சொல்லுறீர் குடாநாட்டுக்கு வெளியாலை இன்னுமொரு யாழ்ப்பாணத்தை அமைச்சால் நல்லது. அதாலை தமிழ் சனம் நல்லா இருக்குமெண்டு ஆலோசனையைச் சொல்லிப் போட்டுப் போயிட்டீர்.

அபிவிருத்தியை யாழ்ப்பாணத்துக்கை மட்டும் செய்யாமல்....... எண்டு சொன்னதின்ரை விளக்கம் என்ன எண்டு முதலிதான் கேட்டவன். அப்பிடி என்ன யாழ்ப்பாணத்துக்கை அபிவிருத்தி எல்லாம் செய்து முடிஞ்சு மேல் மிச்சமா தேவை இல்லாத வேலை செய்யிற மாதிரியெல்லே உவற்றை கதை. இஞ்சை செய்ததெல்லாம் அரை குறையாத்தான் செய்திருக்கு. இன்னும் தூக்கி நிமித்தக் கனக்கக் கிடக்கு. முழுசாக் கொண்டு போய் இன்னும் சனத்தைக் குடியேத்தேல்லை. இன்னும் எவ்வளவு பேர் காம்ப்பிலை இருக்கினம். அப்பிடிப் போன கன ஆக்களுக்கு இன்னும் செவ்வையா வீடு கட்டச் செய்யிற உதவியளும் முழுசாச் செய்த மாதிரியும் இல்லை. யாழ்ப்பாணமே இன்னும் உருப்படியான யாழ்ப்பாணமா இல்லை. அதுக்கை நிமித்தி எடுக்கிறதுக்கெண்டு கனக்க இருக்கு. சண்டைக்குப் பிறகு அதுக்கை அபிவிருத்தி செய்ய எண்டு இன்னும் எவ்வளவு இருக்கு எண்டது தெரியுமே?

சரி இன்னுமொரு நகரம் எண்டால் அது எப்பிடி இருக்கும் எண்டு முதலி கேக்கிறான். அதிலை ஆர்? என்ன மாதிரி? குடியேறுவினம். அதிலையும் ஆமிக் காம்ப் இருக்குமோ? தூள் கஞ்சா விப்பினமோ? வாள் வெட்டும் இருக்குமோ? •சகோதரங்கள் மாவா விப்பினமோ? சாராயக் கடையள் எத்தினை வரும்? உதைக் கிளியர் பண்ணினால்தான் சொல்லலாம் அது எங்களுக்கு நல்லதோ? கெட்டதோ? எண்டும் முதலி சொன்னவன்.

உதிலையும் ஒரு அரசியல் இருக்கும். அது இப்ப எங்களுக்குத் தெரியாது. போகப் போகத்தான் தெரிய வரும். இதுவரையும் இல்லாமல் இப்பதான் யாழ்ப்பாணத்தைச் சனி பாக்கத் துவங்கி இருக்கிது எண்டு நினைக்கிறன். சனி பார்வை எவ்வளவு கேடு எண்டு உடனை தெரியாது. போகப் போக அது உச்சத்திலை போகும். அப்ப அலைக்கழியேக்கைதான் அதின்ரை விளையாட்டு என்ன எண்டது தெரியவரும்.

**- வில்லங்கம் விநாசி**

# தொடர்ச்சிகள்

## அரசாங்கத்திலிருந்து... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக்கட்சி விலகுவது தொடர்பான முன்மொழிவுகளை சமர்ப்பிக்கவுள்ளதாக 'குறூப் 16' இன் முக்கியஸ்தரான எஸ்.பி திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

சுதந்திரக்கட்சியை சேர்ந்த பலர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் பணியாற்ற தயாரில்லையென ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மக்களின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீள்குடியேற்ற அமைச்சருக்கு வாழ்வாதாரம் கோரியும், தமது கல்வித் தகைமைக்கமைய வேலைகளை பெற்றுத் தருமாறு கோரியும் மக்களால் வழங்கப்பட்ட கடிதங்களும் காணப்படுகின்றன.

தமது கோரிக்கைகளை அவர்கள் செவி சாய்க்காவிடினும் இவ்வாறு எமது கண் முன் கோரிக்கைகள் வீசப்பட்டுள்ளமை தொடர்பில் கவலை அடைவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## புகையிரத... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சின் பிரதி அமைச்சர் அசோக் அபயசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் முடிவு செய்த பிரகாரம் நேற்று பிற்பகல் 4 மணியில் இருந்து தமது வேலைநிறுத்த போராட்டத்தை முன்னெடுப்பதாக புகையிரத தொழில்நுட்ப சேவை தொழிற்சங்கக் குழுவின் செயலாளர் கமல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## தாக்குதலை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையம் முன்பாக இடம்பெறவுள்ளது. இந்தப் போராட்டத்தில் பங்கேற்று ஆதரவளிக்குமாறு அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் உட்பட அனைத்து தரப்புகளுக்கும் ஏற்பாட்டாளர்கள் அழைப்புவிடுத்துள்ளனர்.

## வவுனியாவில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதியம் 2 மணியளவில் தனியார் கல்வி நிலையத்துக்கு செலவதாகக் கூறியவர் மீண்டும் வீடு வரவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காணாமற்போனவர் வவுனியா வெளிக்குளம் பகுதியில் வசிக்கும் சிவசீலன் சாருபன் என்றும், அவர் இந்த வருடம் க.பொ.த. உயர்தர பரீட்சையில் தோற்ற இருப்பவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் வீட்டில் இருந்து செல்லும் போது சாம்பல் நிற ரீசேட் மற்றும் நீல நிற ஜீன்ஸ் மற்றும் செருப்பு அணிந்திருந்ததுடன், கறுப்பு நிற லேடீஸ் சைக்கிளில் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ் காணும் இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு உறவினார்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். 0776788009/ 0779500230

## தேர்த்திருவிழாவில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அணிந்திருந்த தங்க நகைளை திருடிச் சென்றுள்ளனர்.

தங்க நகைகளைப்பறிகொடுத்தவர்கள் ஆலய பரிபாலன சபையினரிடம் தெரியப்படுத்தியதுடன் நான்கு பவுண் தங்க நகையை பறிகொடுத்த பெண்மணி ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

5 பேரின் தங்க நகைகளின் பெறுமதி 12பவுண் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திருட்டுத் தொடர்பான மேலதிக விசாரணகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கனடாவில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டவராவார்.

தமிழர்கள் செறிந்து வாழும் ஸ்காபுரோ பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

Lester B. Pearson கல்லூரிக்கு அருகாமையில் நேற்று முன்தினம் இரவு 11:55 மணியளவில் இவரது உடல் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உணவகம் ஒன்றில் இரவுக் கடமையை முடித்து விட்டு, உடற்பயிற்சிக் கூடத்துக்குச் சென்று விட்டு திரும்பிய போது, இவர் சுடப்பட்டுள்ளார். குறித்த மாணவனிடம், கொள்ளையடித்த பின்னர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. அருகிலுள்ள சிசிடிவி காட்சிகளை வைத்து கொலைச் சம்பவத்துடன்தொடர்புடையவர்களை கைது செய்ய ரொரண்டோ பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## தமிழர்கள் மீதான... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயப்படுகின்றோம்.

மேலதிக பாதுகாப்பைக் கோரிப் பெறமுடியாதாவென முன்வைக்கப்பட்ட வாராந்த கேள்வி பதிலிலேயே முதலமைச்சர் மரணம் பற்றி அச்சமில்லையென தெரிவித்துள்ளார்.

எமது முள்ளிவாய்கால் நிகழ்வு இவ்வாறான ஆத்திரத்தை சில சிங்களவர் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. அதன் அர்த்தம் என்னவென்றால் "உங்களின் அரசியல் பிரச்சினைகளை வெளிப்படுத்தாதீர்கள்! வெளிப்படுத்தினால் அடிப்போம்,கொல்லுவோம், நாட்டைவிட்டுத் துரத்துவோம்." என்பதே. சிங்கள மக்களின் இவ்வாறான எதிர்மறைக்கருத்துக்களும் வன்நடவடிக்கைகளும் முன்னரும் வெளிவந்துள்ளன. "சிங்களம் மட்டும்"சட்டம் கொண்டு வந்த போது எம்மைப் பயப்படுத்தி பேசாது வைக்கப் பார்த்தார்கள். காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் இருந்த என் நண்பர் மௌசூர் மௌலானாவையும் வேறு சிலரையும் பேரை ஏரிக்குள் அப்படியே தூக்கி வீசினார்கள். 58ம் ஆண்டுக் கலவரம், 77ம் ஆண்டுக் கலவரம், 83ம் ஆண்டுக் கலவரம் என்று தமிழ் மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. பிள்ளையைக் கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுவது போல் எமது முக்கிய தேசிய அரசியல் கட்சிகள் தமது ஆதரவாளர்கள் மூலமாக எங்களுக்குச் செய்வதெல்லாம் செய்து விட்டு துக்கம் விசாரிக்க வந்தார்கள். இது இலங்கை அரசியலில் சர்வசாதாரணம்.

இவற்றினால் சிங்கள அரசியல் தலைமைத்துவம் எதைக் கூறுகின்றது? "தமிழர்களை நாம் கட்டி ஆண்டு கொண்டிருகின்றோம், அவர்களை அதிகம் பேசவிடக்கூடாது. விட்டால் எமது உண்மை சொரூபம் உலகத்துக்கு தெரிந்து விடும். ஆகவே அதிகம் பேசுபவனுக்கு உயிர்ப் பயத்தை ஏற்படுத்துவோம், வெள்ளை வானில் கொண்டு சென்று உரிய தண்டனை வழங்குவோம். சர்வதேசம் கேள்வி கேட்டால் நாங்கள் உதாரண புருஷர்கள், பிழையே செய்ய மாட்டோம் என்போம். சென்ற முள்ளிவாய்க்கால் போரில் கூட ஒரு கையில் மனித உரிமைசாசனம் மறுகையில் துப்பாக்கி வைத்துக்கொண்டே போராடினோம். அப்பாவி ஒருவர் தானும் கொல்லப்படவில்லை. பூஜ்ய அப்பாவி மரணங்கள் என்று கூறுவோம். இந்தத் தமிழர்கள் அனைவரும் தீவிரவாதிகள், பிரிவினைவாதிகள், வன்முறைவாதிகள் என்றெல்லாம் உலகுக்கு எடுத்துக் காட்டுவோம்" என்றவாறு தான் கூறி வந்துள்ளனர்.

நாங்களும் அவற்றைக் கண்டு கேட்டுப் பயந்து விட்டோம். எனவே ஒன்றில் இலங்கையை விட்டு வெளியேறி எமது மன உளைச்சல்களை வெளியிலிருந்து வெளிப்படுத்திக்கொண்டு வருகின்றோம். அங்கிருந்து உள்ளூர்வாசிகளுக்குப் பணம் தந்துஉதவுகின்றோம். அல்லது உள்ளூரில் இருக்கும் எம்மவரோ மக்களிடம் ஒருமுகம் அரசாங்கத்துக்கு இன்னொருமுகம் காட்டுகின்றார்கள். எமது அடிப்படை அரசியல் கோரிக்கைகளை தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்குகின்றோம். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அரசாங்கத்துக்கு வேறொருமுகம் காட்டுகின்றோம். "நீங்கள் எதைத் தந்தாலும் நாம் பெற்றுக் கொள்வோம்" என்ற தொனிப்பட அவர்களுடன் பேசுகின்றோம். "நாங்கள் "தா" "தா"என்றுகேட்போம். ஆனால் நீங்கள் தருவதைத் தாருங்கள்" என்கின்றோம். அதற்குப் பிரதி உபகாரமாக அரசாங்கமும் தனது உதவிக் கரங்களை நீட்டுகின்றது. தனிப்பட்ட உதவிகளைப் பெற்றுவிட்டு உண்மையான, எமக்குத் தேவையான அரசியல் பேசாது வந்து விடுகின்றோம்.

இதிலிருந்து ஒன்றை நாம் புரிந்துகொள்ளவேண்டும். எமது கோரிக்கைகளை, மனக்கிடக்கைகளை வெளிப்படையாக சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறாமல் எமக்குள் ஒன்று கூறி அவர்களுக்கு இன்னொன்று கூறிவந்ததால்தான் நியாயமான உரிமைகள் கோரும் ஒருவர் கூட அவர்களுக்கு நாட்டின் துரோகி ஆகின்றார். தீவிரவாதி ஆகின்றார். நாங்கள் முதலில் இருந்தே எமது கொள்கைகளுக்கு விஸ்வாசமாக நடந்து கொண்டிருந்தோமானால் உண்மையாக உரிமைகள் கோருபவரை சிங்கள மக்கள் இந்தளவுக்கு வெறுத்திருக்க மாட்டார்கள்.

உயிருக்கு ஆபத்து எப்பொழுதும் யாருக்கும் இருந்து கொண்டே இருக்கின்றது.

அதற்காக சொல்லவேண்டியதை விடுத்து சிங்களவருக்கு ஏற்ற சொகுசான கருத்துக்களைக் கூறிக்கொண்டு இருந்தோமானால் நாம் தப்புவோம் என்று நினைப்பது தவறு. கட்டாயம் அவன் கொல்ல இருப்பவன் கொல்லத் தான் போகின்றான். சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டு சாவது மேலா அல்லது சொகுசு வார்த்தைகளைக் கூறிவிட்டு வெள்ளம் தலைக்கேறும் போது அதை மாற்றி உண்மையை உரைக்கும் போது நாம் உயிர்ப்பலி யாவது மேலா? எமக்கென்று கடமைகள் உண்டு. அவற்றை நாம் சரியாகச் செய்வோம். உயிரைக் காலன் வந்து எடுக்கும் நேரம் எடுத்துச் செல்லட்டும். எந்த ஒரு அஹிம்சா மூர்த்தி கூட கொல்லப்படவேண்டும் என்று நியதியிருந்தால் அவரின் மரணம் அவ்வாறே நடக்கும். மகாத்மாகாந்தி இதற்கொரு உதாரணம்.

முள்ளிவாய்க்காலில் நான் கூறியவற்றினாலும் அவ்வாறான ஒரு நிகழ்ச்சி நடந்ததாலும் ஏன் சில சிங்கள மக்கள் வெகுண்டெழுந்துள்ளார்கள்? பல காரணங்களை நான் கூறுவேன்.

முன்னைய ராஜபக்ச அரசாங்கம் வெளிப்படையாக எம்மைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. வாய் திறந்தால் வன்முறை அல்லது சிறைவாசம் என்றிருந்தது. ஜனநாயக நாடுகளின் ஒத்துழைப்பால் உருவாகிய இந்த அரசாங்கம் எம்மை முன்புபோல் கட்டிவைக்க முடியாத நிலையில் இருக்கின்றது.

இன்றைய நிலைவேறு, முன்னர் இருந்த நிலைவேறு. உலகம் உண்மையை உணராது முன்னர் இருந்தது. அப்பாவிகள் கொல்லப்பட்டமை, இனப்படுகொலை போன்ற உண்மைகள் தற்போது சிங்கள மக்களால் உணரப்பட்டுள்ளன. சர்வதேசத்தாலும் உணரப்பட்டுள்ளன. இதுவரையில் ஜெனீவாவில் கொடுத்த காலக்கெடு விரைவில் முடிவுக்கு வரப்போகின்றது. அமெரிக்க ஸ்தானிகர் அதுல் கேசாப் அவர்கள் தாம் செய்வதாக ஜெனிவாவில் வாக்குறுதி அளித்தனவற்றை இலங்கை கண்டிப்பாகச் செய்து முடிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இலங்கை அரசாங்கம் செய்வதறியாது தடுமாறுகின்றது. இந்த நேரத்தில் இவ்வாறான ஒரு நிகழ்வு தம்மைப் பாதிக்கும் என்று நினைத்து எம்மை அடக்க முயன்றிருக்கக்கூடும்.

இராணுவம் ஒருபுறம், அரசாங்கம் மறுபுறம் தமிழர்களுக்கு நன்மைகள் பெற்றுத் தரப்போகின்றோம் என்று கூறிவருகின்றன. தமிழர்களின் அடிப்படை உரிமைகளைக் கொடுப்போம் என்று எவரும் கூறவில்லை. சிங்களவர் கூறுவதுபோல் "போணிக்கா" (பொம்மைகள்) வேண்டித் தருவதாக வாக்களிக்கின்றார்களே ஒளிய 70 வருட பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறவில்லை. அந்தப் பிரச்சினைகளை நினைவுபடுத்தினால்தான் கொலைமிரட்டல்கள் வருகின்றன. ஆகவேதான் எந்த ஒரு சிங்கள அரசாங்கமும் பாரிய நெருக்கடி இருந்தால் ஒளிய எமது அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்க முன்வராது என்று கூறிவருகின்றேன்.

நான் "அடிப்படை" என்று கூறும் போது எமது தனித்துவத்தைப் பாதுகாப்பதையே கூறிவருகின்றேன். வடகிழக்கு இணைப்புவேண்டும் என்று கூறும் போது அங்கு தமிழ் மொழியே இது காறும் கோலோச்சி வந்தது. அது தொடர இணைப்பு அவசியம். எம்மை இரண்டாந்தரப் பிரஜைகளாக இதுவரை நடத்திவந்த அரசாங்கம் எமது தனித்துவத்தை மதித்து சுயாட்சி வழங்கவேண்டும் என்பது இரண்டாவது அடிப்படைக் கோரிக்கை. தாயகம் என்பது அதனுள் அடங்கும். மூன்றாவதாக ஒற்றையாட்சிக்குக் கீழ் சிங்கள மேலாதிக்கம் தொடரும் என்பதால் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் யாப்பு கோரப்படுகின்றது.

சிங்கள மக்கள் மத்தியில் பல பிழையான செய்திகள் சென்ற 70 வருடங்களாக பரப்பப்பட்டு வந்துள்ளன. இந்த நாடு தொன்றுதொட்டு சிங்களவர் வாழ்ந்து வந்த நாடு. தமிழர் சோழர் காலத்தில் கி.பி பத்தாம் நூற்றாண்டில்தான் வந்தார்கள். அவர்கள் கள்ளத் தோணிகள். அவர்களை இந்தியாவுக்கு அடித்துத் துரத்தவேண்டும். அண்மையில் வந்தவர்கள் தமக்கென ஒருநாட்டைக் கேட்பது எவ்வளவு அயோக்கியத்தனம். இந்த உலகத்தில் எமக்கென இருப்பது இந்த ஒருநாடே. அதையும் தமிழர் பங்கு போடப் பார்க்கின்றார்கள். விடமாட்டோம் என்கின்றார்கள் அப்பாவிச் சிங்களவர்கள்.

உண்மையை அவர்களுக்கு எடுத்துரைக்க யாரும் இல்லை. இலங்கையின் மூத்த குடிகள் தமிழரே. சிங்கள மொழி கி.பி 6ம் 7ம் நூற்றாண்டுகளிலேதான் வழக்கத்துக்கு வந்தது. அதற்குமுன்னர் வாழ்ந்தவர்களைச் சிங்களவர் என்று அழைக்க முடியாது. துட்டகைமுனு கூட சிங்களவனாக இருந்திருக்க முடியாது. டிஎன்ஏ பரிசீலனைகள் இன்றைய சிங்களவர் ஆதித்திராவிடரே என்று கூறுகின்றன. தமிழர் பற்றிய உண்மையை அறிந்து கொண்டால் சிங்கள மக்களின் ஆர்ப்பாட்டங்கள் குறையக் கூடும்.அல்லது ஏமாற்றத்தில் இன்னமும் உக்கிரமடையக் கூடும்.

எம்மைக் கொல்ல எத்தனிப்பவர்கள் காட்டுமிராண்டிகள் போல் நடந்துகொள்ளாமல் தமது தலைவர்களை எம்முடன் பேச அனுப்பவேண்டும். நாம் எமது அடிப்படைகளை அவர்களுக்கு விளங்கவைப்போம். புரிந்துணர்வு அற்ற இன்றைய நிலையே இவ்வாறான பதட்டங்களுக்கு இடமளித்துள்ளதென முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

# திருமதி. சின்னராசா கமலா



அல்வாய் தெற்கு, திரவிய பவனத்தைச் சேர்ந்த திருமதி. சின்னராசா கமலா நேற்று 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலாமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் சின்னராசா அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சீனிமுத்து திரவியம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற மாணிக்கம் நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் , திரவியமலர் அவர்களின் பாசமிகு சகோதரியும், கௌசிகன்( ஆசிரியர், பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம்), கபிலன் (ஆசிரியர், அல்வாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை), விமலன் (முகாமைத்துவ உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயபாரதி (ஆசிரியை, ஹாட்லிக் கல்லூரி), தாரணி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம்,கரவெட்டி), மீரா ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரூஜா, நீரஜா, ஜனகன், ஜனுசிகன், கஜானன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற திருமதி. வீரசிங்கம் தெய்வநாயகி மற்றும் செல்லத்தம்பி( ஓய்வுநிலை அலுவலர், மின்சாரசபை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 30.05.2018 புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"திரவியபவனம்",
அல்வாய்

தகவல்: பிள்ளைகள்
சி.கௌசிகன் - 0776280157
சி.கபிலன் - 0774407834
சி.விமலன் - 0776991015





# ஸ்டெர்லைட் ஆலைக்கு மூடு விழா

## தூத்துக்குடி மக்கள் மகிழ்ச்சி

தூத்துக்குடி , மே 30

தமிழக அரசின் உத்தரவுப்படி தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு நேற்றுமுன் தினம் மாலை 'சீல்' வைக்கப்பட்டது. இதற்குத் தூத்துக்குடி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த தூத்துக்குடி மக்கள் ஆலையின் முன்பு குவிந்தனர். ஆலைக்குச் 'சீல்' வைக்கப்பட்டவுடன் அவர்கள் தைத்தட்டியும், கைகளை உயர்த்தியும் கோஷங்களை எழுப்பி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

"கடந்த 23 ஆண்டுகளாக ஆலைக்கு எதிராகப் போராட்டங்கள் நடந்து வருகின்றன. ஆனால், அரசு அந்த நிறுவனத்துக்கு ஆதரவாகவே இருந்து வந்தது. தற்போது, 100 நாட்கள் மக்கள் போராட்டம் நடத்திய போதும் அரசு கண்டு கொள்ளவில்லை. இதற்காக 13 உயிர்களை இழந்தும், பலர் இரத்தம் சிந்தியும் உள்ளனர். இதன் பின்னர் தான் இந்த உத்தரவைப் பெற்றுள்ளோம். இது திருப்தி அளிக்கிறது. இதே நேரத்தில் வேதாந்தா அதிபர் சட்டத்தில் உள்ள ஓட்டைகளில் புகுந்து ஆலையை இயக்க முயற்சி செய்வார். இதனால், மாநில அரசு தக்க நடவடிக்கைகளை தற்போது இருந்தே மேற்கொள்ள வேண்டும்" என்று தூத்துக்குடி மக்கள் தெரிவித்துள்ளனர். (ஆ)




### ட்ரம்ப் -கிம் பேச்சு:

## அமெரிக்க அதிகாரிகள் வடகொரியா விஜயம்

வொஷிங்டன் , மே 30

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இதுதொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரிகளை வடகொரியாவுக்கு அனுப்பியுள்ளார்.

வடகொரியா அதிகாரிகளுடன் ஆலோசனை செய்வதற்காக அமெரிக்க அதிகாரிகளை பியாங்யாங் நகருக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தனது ருவிட்டர் பக்கத்தில் டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

"பிரமாதமான வளங்களைக் கொண்ட வடகொரியா, பொருளாதாரம் மற்றும் நிதியமைப்பில் ஒருநாள் உயர்ந்ததாக உருவாகும் என நம்புகின்றேன்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# அணு ஆயுதங்கள் அழிக்கப்பட வேண்டும்

## ட்ரம்ப், அபே வலியுறுத்து



வொஷிங்டன், மே 30

வடகொரியாவின் அணு ஆயுதங்கள் கட்டாயம் அழிக்கப்பட வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் , ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஆகியோர், அடுத்த மாதம் 12ஆம் திகதி சிங்கப்பூரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிடையே இரண்டு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால், முதலில் ஒப்புக்கொண்ட ட்ரம்ப் பின்பு மறுத்தார். இதனைத் தொடர்ந்து, தனது நாட்டின் அணு ஆயுதச் சோதனைக் கூடத்தை கிம் ஜோங் உன் முற்றிலுமாகத் தகர்த்தார். அத்துடன், ட்ரம்பைச் சந்தித்துப் பேசுவதிலும் உறுதியாக இருந்தார். இதற்காக தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையும் நடத்தினார். இதனைத் தொடர்ந்து, கிம் ஜோங் உன் உடனான சந்திப்பை மீண்டும் ட்ரம்ப் உறுதிப்படுத்தினார்.

இந்த நிலையில், ட்ரம்பும், ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயும் நேற்று முன்தினம் தொலைபேசியில் உரையாடியுள்ளனர். இதன்போது, வடகொரியாவுடனான சந்திப்புக் குறித்து இருவரும் ஆலோசித்தனர். அப்போது, வடகொரியாவின் அணு ஆயுதங்கள் கட்டாயம் அழிக்கப்பட வேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளதாக வெள்ளை மாளிகைத் தரப்பு தெரிவித்துள்ளது. (ஆ)

# பிக்பாஸ்-2 இல் மீண்டும் ஓவியா?



சென்னை, மே 30

பிக்பாஸ் நிகழ்ச்சியின் இரண்டாம் பாகம் எதிர்வரும் 11ஆம் திகதி தொடங்கப்பட உள்ளது. இந்த நிகழ்ச்சியையும் நடிகர் கமல் ஹாசனே தொகுத்து வழங்க உள்ளார். பிக்பாஸ் - 2 இல் பங்கேற்கவிருப்பவர்கள் யார் என்ற பரபரப்பான எதிர்ப்பார்ப்பு நிலவி வரும் நிலையில், நடிகை ஓவியா அதில் கலந்து கொள்ளப் போகிறார் என்று சில ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால், தான் 100 நாட்கள் தங்கப் போவதில்லை என்றும், நட்பின் நிமித்தமாக ஒரே ஒரு நாள் மட்டும் பங்கேற்கலாம் என்றும் நடிகை ஓவியா கூறியிருக்கிறாராம் .

இந்த நிகழ்ச்சியில் நடிகை ரம்பா பங்கேற்க விருப்பதாக முன்பு ஒரு தகவல் வந்தது. ஆனால், அண்மையில்மூன்றாவது குழந்தைக்குத்தாயான நடிகை ரம்பாவால் 100 நாட்கள் வெளியில் தங்க முடியாது. எனவே அவரைத் தவிர்த்து, நடிகைகளான கஸ்தூரி, சிம்ரன் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. (ஆ)

# 'மிஸ்டர் சந்திரமௌலி' ஜூலை 6 இல் ரிலீஸ்



சென்னை, மே 30

இயக்குநர் திருவின் இயக்கத்தில் கௌதம் கார்த்திக் - ரெஜினா கசாண்ட்ரா ஆகியோரின் நடிப்பில் உருவாகி இருக்கும் 'மிஸ்டர் சந்திரமௌலி' திரைப்படம் எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி வெளியாக உள்ளது.

கார்த்திக்கும், கௌதம் கார்த்திக்கும் முதல் முறையாக இணைந்து நடித்திருக்கும் இந்தப் படத்தை கிரியேட்டிவ் எண்டர்டெய்னர்ஸ் அன்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் நிறுவனம் சார்பில் தனஞ்செயன் தயாரித்துள்ளார்.

இந்தப் படப்பிடிப்பு முடிந்து பின்னணி வேலைகள் மும்முரமாக நடந்து வரும் நிலையில், படத்தின் வெளியீட்டுத் திகதியைப் படக்குழு வெளியிட்டுள்ளது.

இந்தப் படத்தில் வரலட்சுமி சரத்குமார், சதீஷ், இயக்குநர்கள் மகேந்திரன், அகத்தியன், விஜய் சந்திரசேகர் உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். (ஆ)

# 150,000 பசுக்களைக் கொல்ல நியூசிலாந்து அரசு முடிவு

வெல்லிங்டன், மே 30

'மைக்ரோபிளாஸ்மா போவிஸ்' எனப்படும் பாக்டீரியா தொற்று நோயைத் தடுக்கும் விதமாக , ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பசுக்களைக் கொல்ல நியூசிலாந்து அரசு முடிவு செய்துள்ளது.

உலகிலேயே அதிக அளவில் பால் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் நியூசிலாந்து முதலாவது இடத்தில் உள்ளது. இந்த நிலையில், பசுக்களில் நிமோனியா உள்ளிட்ட நோய்களை உருவாக்கும் 'மைக்ரோபிளாஸ்மா போவிஸ்' எனப்படும் பாக்டீரியா கடந்த ஆண்டு ஜூலை மாதம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கண்டறியப்பட்டது.



இந்தப் பாக்டீரியாவால் உணவுப் பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. இருந்த போதிலும் நியூசிலாந்தின் முக்கிய பொருளாதார தொழிலான பால்வளம் மற்றும் கால்நடை உற்பத்தியை இது பாதிக்கும் என்பதால், பாக்டீரியா தொற்று கண்டறியப்பட்ட பண்ணைகளில் உள்ள பசுக்கள் மற்றும் ஆரோக்கியமாக உள்ள சில பசுக்களையும் அழிக்க நியூசிலாந்து அரசு முடிவு செய்துள்ளது.

இந்த ஒட்டுமொத்த அழிப்பு நடவடிக்கை குறித்து அந்த நாட்டுப்பிரதமர் ஜெசிந்தா அர்டெர்ன் , "நியூசிலாந்து பொருளாதாரத்தின் பால்வளம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாகும். இந்த ஒட்டு மொத்த பசு ஒழிப்பை யாரும் விரும்புவதில்லை. இது மிகவும் கடினமான முடிவு. ஆனால், இதனைச் செய்யாவிட்டால் நியூசிலாந்து நாட்டின் கால்நடை வளம் அழிந்து விடும். உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால், நாட்டில் உள்ள 20 ஆயிரம் பால் பண்ணைகள் மற்றும் மாட்டிறைச்சி நிலையங்களைக் காக்க முடியாமல் போய்விடும்" என்று தெரிவித்துள்ளார். (ஆ)

# வெனிசூலாவில் மீண்டும் தேர்தல்!

பெல்ஜியம், மே 30

வெனிசூலாவில் கடந்த வாரம் நடைபெற்ற சர்ச்சைக்குரிய ஜனாதிபதி தேர்தலை இரத்துச் செய்துவிட்டு, புதிய தேர்தலை மீண்டும் நடத்த வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தி உள்ளது.

பெல்ஜியத்தில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கூட்டத்திலேயே இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வெனிசூலாவில் சர்வதேச ஜனநாயக வரைமுறைகளுக்கு உட்பட்டு புதிய ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். அவ்வாறு நடத்தத் தவறினால், அந்த நாட்டின் மீது கூடுதல் பொருளாதாரத்தடைகளை விதிப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர்கள் வலியுறுத்தினர்.

# ஆட்டநிர்ணய சதியில் மற்றுமொரு இலங்கை வீரர்

கொழும்பு, மே 30

மற்றுமொரு இலங்கை கிரிக்கெட் வீரர் ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்டமை தொடர்பான தகவல்களை அல் ஜசீரா தொலைக்காட்சி வெளியிடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் நடைபெற்ற சிம்பாப்பே அணியுடனான தொடரின் போது இடம்பெற்ற ஆட்ட நிர்ணய சதியில் குறித்த இலங்கை வீரர் தொடர்புபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கையில் கடந்த 2016ஆம் இடம்பெற்ற டெஸ்ட் போட்டிகளில் காலி விளையாட்டு மைதானத்தை மாற்றியமைப்பதற்காக இலஞ்சம் பெற்றுக்கொண்டமை தொடர்பில், இலங்கையின் முன்னாள் வீரர்கள் மற்றும் மைதான முகாமையாளர்கள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் மற்றுமொரு ஆட்ட நிர்ணய சதி குறித்த தகவல்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# உருகிய தாகீர்

சென்னை, மே 30

ஐ.பி.எல். தொடர் முடிவடைந்துவிட்ட நிலையில் சென்னை சூப்பர் கிங்ஸ் வீரர் தனது சொந்த நாடான தென்னாபிரிக்காவுக்கு நேற்று முன்தினம் சோகத்துடன் திரும்பியுள்ளார் இம்ரான் தாகீர்.

நாடு திரும்புமுன்னர் தனது ட்விட்டர் பக்கத்தில்,

"என் இனிய தமிழ் மக்களே வந்தோம் வென்றோம் சென்றோம். அடுத்த வருடம் வருவோம் வெல்வோம் செல்வோம். உங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் மிக்க நன்றி. விடை பெறுகிறேன் உங்கள் நினைவுகளோடு" என உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

இம்ரான் தாகீரின் இந்த உருக்கமான பதிவு சென்னை ரசிகர்களிடையே மிகப்பெரிய வரவேற்பைப் பெற்று வருவதுடன், சமூகவலைத் தளங்களில் அதிகமாகப் பகிரப்பட்டும் வருகிறது. (ஐ)



# களமிறங்கும் குழப்படி வீரர்கள்

அவுஸ்ரேலியா, மே 30

பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்தில் தடை விதிக்கப்பட்ட ஸ்மித், வோர்னர் மற்றும் பான்கிராப்ட் ஆகியோர் ஜூலை மாதத்திலிருந்து கிரிக்கெட்டில் களமிறங்க உள்ளனர்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான கேப்டவுண் டெஸ்டின்போது அவுஸ்ரேலிய அணி வீரர்கள் பந்தைச் சேதப்படுத்தியது தெரிய வந்தது. இந்த விவகாரத்தில் பான்கிராப்டுக்கு 9 மாதங்களும், ஸ்டீவ் ஸ்மித் மற்றும் டேவிட் வோர்னர் ஆகியோருக்கு ஓர் ஆண்டு காலமும் விளையாடத் தடை விதிக்கப்பட்டது.

எனினும், வெளிநாடுகளில் நடைபெறும் டி20 தொடர் மற்றும் உள்ளூர் தொடரிலும் விளையாட அனுமதி அளிக்கப்பட்டது.

இந்நிலையில், வோர்னர் மற்றும் பான்கிராஃப்ட் ஆகியோர், ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் 20ஆம் திகதி வரை டார்வினில் நான்கு அணிகள் பங்கேற்கும் என்.ரி. ஸ்ரிக் லீக் தொடரில் பங்கேற்க உள்ளனர்.

இந்தத் தொடரில் ஒவ்வொரு அணியும் தலா 8 டி20 போட்டிகளிலும், 3 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடும். இந்தத் தொடர் முழுவதும் பான்கிராஃப்ட் விளையாட உள்ளார். வோர்னர் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் நடைபெறும் ஒருநாள் போட்டிகளில் விளையாட உள்ளார்.

அதே போல், ஸ்டீவ் ஸ்மித்தும் ஜூன் 28ஆம் திகதியிலிருந்து ஜூலை 15ஆம் திகதி வரை நடைபெறும் குளோபல் டி20 கனடா தொடரில் விளையாட இருக்கிறார். இதற்கான வீரர்கள் ஏலம் வரைவு பட்டியலில் வோர்னரின் பெயரும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அதிர்ச்சி!



பரிஸ், மே 30

பிரேஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரில், முன்னணி நட்சத்திரங்களான வாவ்ரிங்கா மற்றும் அஸரென்கா ஆகியோர் அதிர்ச்சியுடன் வெளியேறினர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடர் பரிஸ் நகரில் நடந்து வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் சம்பியனான வாவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து) 2-6, 6-3, 6-4, 6-7, 3-6 என்ற புள்ளிகள் கணக்கில் ஸ்பெயின் வீரர் குல்லெர்மோ கார்சியா லோபெஸ்சிடம் தோல்வியடைந்து வெளியேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் முன்னாள் முதல்நிலை வீரர் நோவக் ஜோகோவிச் (செர்பியா) 6-3, 6-4, 6-4 என்ற புள்ளிக் கணக்கில் பிரேசிலைச் சேர்ந்த தகுதிச் சுற்று வீரர் ரோஜரியோ டுத்ரா சில்வாவைத் தோற்கடித்து 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இன்னொரு ஆட்டத்தில் ஆஸ்திரிய வீரர் டோமினிச் திம் 6-2, 6-4, 6-4 என்ற புள்ளிக் கணக்கில் பெலாரஸ் வீரர் இல்வா இவாஷ்காவை வென்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி 7-6 , 6-1 என்ற புள்ளிக் கணக்கில் அமெரிக்காவின் டானில்லா காலின்சை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்குள் நுழைந்தார். மற்றொரு ஆட்டத்தில் செக்குடியரசு வீராங்கனை கிவிடோவா 3-6, 6-1, 7-5 என்ற புள்ளிக் கணக்கில் பராகுவே வீராங்கனை வெரோனிசியாவைச் சாய்த்து அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

இன்னொரு ஆட்டத்தில் ஜப்பான் வீராங்கனை நோமி ஒசாகா 6-2, 7-5 என்ற புள்ளிக் கணக்கில் அமெரிக்காவின் சோபியா கெனினைச்சாய்த்து 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் 2 தடவைகள் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான விக்டோரியா அஸரென்கா (பெலாரஸ்) 5-7, 5-7 என்ற புள்ளிக் கணக்கில் செக்குடியரசு வீராங்கனை காதெரினா சினியாகோவாவிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டு நடையை கட்டினார். (ஐ)

# கிண்ணத்துக்கு பூஜை




சென்னை, மே 30

சம்பியன் கிண்ணத்துக்கு பூஜை செய்துள்ளார் சென்னை அணியின் உரியமையாளர்.

ஐ.பி.எல். கிண்ணத்துடன் சூப்பர் கிங்ஸ் வீரர்கள் நேற்றுமுன்தினம் சென்னையைச் சென்றடைந்தனர். அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. 3ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை சென்னை சூப்பர் கிங்ஸ் வென்றுள்ளது.

இந்நிலையில், நேற்று சென்னை திநகரில் உள்ள பாலாஜி கோயிலுக்குக் கிண்ணத்தை எடுத்துச் சென்ற அணி உரிமையாளர்கள், அதனை வைத்து பூஜை செய்துள்ளனர். (ஐ)



# வலைப்பந்தாட்ட தேசிய அணியில் இடம்பிடித்த யாழ். வீராங்கனை

யாழ்ப்பாணம், மே 30

கொழும்பில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை வலைப்பந்தாட்ட தேசிய அணி சார்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எழிலேந்தினி விளையாடியுள்ளார். அதேவேளை அந்த அணி, வெற்றியையும் பெற்றுள்ளது.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை வலைப்பந்தாட்ட அபிவிருத்தி அணியை எதிர்த்து இலங்கை தேசிய வலைப்பந்தாட்ட அணி மோதியது.

இந்த ஆட்டத்தில் தேசிய அணி சார்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எழிலேந்தினியும் களமிறக்கப்பட்டார்.

இந்தப் போட்டியில் தேசிய வலைப்பந்தாட்ட அணி 74:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 30.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.